Reg. M. 2330.  "SIDDHANTHAM" Vol. 16. No. 4

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு


| மலர் 16 | சுபானுஹு சித்திரைமீ 1943ஹு ஏப்ரல்மீ | இதழ் 4 |
|---|---|---|

பத்திராசிரியர் :—திரு. P. R. சுவாமிநாதன், M.A., L.T.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2  தனிப்பிரதி அணா 3


## ஞான வாள்

[பத்திராசிரியர்]

உயிர், கடவுளுமன்று - உலகமுமன்று; ஆனல் இரண்டையும் அறியுஞ் சக்தியையுடையது. அறிவை வளர்த்தல் வேண்டும். அறியாமையைப் போக்கிக் கொள்ளவேண்டும். அறிவு உடைமையால் இன்பம் பெறலாம். அறியாமையால் துக்கம் பெறலாம். இவ்வுயிர் இன்ப துன்ப நுகர்ச்சியையுடையது.

எப்போது நமக்கு இருக்கும் அறிவு இன்பத்தைத்
...ப்பட்ட இன்பம்? நிலைத்த இன்பம். அறி
...க்கத்தைத் தரும். நிலைத்த இன்பத்தைத்
உண்டு. அதைக்காணவே இவ்வறிவை
சூரியன் வந்த பிறகே சந்திரன் ஒளி
...பரறிவு வந்த பிறகே தற்காலத்திய
...பொருளுடையவனே, கேட்ட பொழுது

தரத்தகுந்தவன். அதேபோல், பேரறிவுடையவனே அவ் வறிவைத் தரத்தகுந்தவன். அவனும் அருளுடையவனுவான்.

> " குறியைக் குறியா தகுறித் தறியும்
> நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலும்
> செறிவற்று உலகோ டுரைசிந் தையுமற்று
> அறிவுஅற்று அறியா மையும்அற் றதுவே " —அனுபூதி

பேரறிவு வந்ததற்கு அடையாளம் உலகபந்தம் நீங்குதல். முதிரமுதிர புளியம் பழம் ஓட்டைவிட்டு நீங்குதல்போல அறிவு முதிர்ந்தோர் பேச்சைவிட்டு மௌன நிலையை அடைவர். உலக சம்பந்தம் நீக்கி, ஒன்றும் பேசாதிருந்து அறிவு நீங்கி, அறியாமையையும் நீங்கும் நிலை அந்நிலை. எப்போது உலகத்தோடு செறிவற்று, உரையற்று, சிந்தையுமற்று இருப்பது? தனிவேலை நிகழ்த்திடலும் என்றபோது. வேல் என்பது ஞானசக்தி. ஞானம் இன்பத்தைத் தரும். நேரே தரும் சக்தியுடையது. கல்வி, செல்வம், சரீர பலம், அதிகாரம் இவைகள் இன்பத்தைத்தரும் எனினும் ஞானத்தின் மூலமாகவே தருஞ் சக்தியுடையன.

" ஞான வாள் ஏந்தும் ஐயர் நாதப்பறையறைமின் " என்பது மணிவாசகர் திருவாக்கு. கடவுள் நமக்குக் கொடுக்கிற ஞானமே அறியாமையைப் போக்கி அழிவில்லாத இன்பத்தைத் தரும்.

# ஸ்ரீ சைலம்

**[மயிலைகிழார் - இளமுருகனுர்]**

**ஸ்ரீ** சைலம் என்ற தலம் 1563 அடி உயரமுள்ள மலைமீது வடநாட்டில் கர்நூல் (=கருநில) ஜில்லாவில் தேவார முதலிகள் மூவராலும் பாடப்பெற்றுத் திருப்பருப்பதம் என்ற பெயரோடு விளங்குகின்றது. சிவராத்திரியன்றும் சில தினங்கள் முன்னும் பின்னும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இத் தலத்தில் வழிபாடு செய்கின்றனர். இவர்களுள் கன்னர

மொழி பேசுவோர் தொகை நூற்றுக்குத் தொண்ணூ றிருக்கும். இவர்களனைவரும் இலிங்கதாரிகளான வீர சைவ சமயத்தினர். இவ்வாண்டில் திருவாளர்கள் - இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், இராவ்பகதூர் க. அரங்க சாமி முதலியார், திருமயிலை கபாலீச்சரம் தருமகர்த்தர் (திரு- பொ. சுந்தரமூர்த்தி முதலியார்) ஆகிய நண்பர்களோடு இத் தலத்தைத் தரிசிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

சென்னையிலிருந்து பம்பாய் மெயிலில் புறப்பட்டுக் குண்டக்கல் ஜங்ஷனையடைந்து அங்கிருந்து வண்டிமாறி நந்தியால் ஸ்டேஷனுக்குச் சுமார் நண்பகல் பதினெட்டு நாழி கைக்குச் சென்றோம். சென்னைக்கும் நந்தியாலுக்கும் 367 மைல் தூரம். மூன்றாம் வகுப்பு மெயில் சார்ஜ் ரூ 7-7-0 ஆகின்றது. நந்தியாலில் முழுக்கு, வழிபாடு, உணவு முத லியவற்றை முடித்துத் தனியாக ஒரு மோட்டார்கார் ஏற் படுத்திக்கொண்டு மாலை $4\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட்டோம். நந்தியாலிலிருந்து ஆத்மகூருக்கு 32 மைல் தூரமுள்ளது. நந்தியாலில் ஒரு பெரிய ஏரியிருப்பதால் நன்செய்ப் பயிர் செழிப்பாயிருக்கிறது. பிறகு வழிநெடுகப் புன்செய்ப் பயிரே காணப்படுகிறது. பருத்தி, கம்பு, சோளம் முதலியன முக் காற் பங்கு வழியிலும், பிறகு ஆத்மகூருக்கு அருகில் உலர்ந்த காடும் காணப்படுகின்றன. ஆத்மகூரிலிருந்து மேற்கே கர்நூலுக்கும், கிழக்கே ஸ்ரீ சைலத்துக்கும் வழி கள் பிரிகின்றன. ஆத்மகூரிலிருந்து ஸ்ரீசைலம் போகும் வழியெல்லாம் வெறுங்காடு. நெடுந்தூரத்துக்கிடையிடையே ஒவ்வொரு சிற்றூர் தோன்றும். சிற்றூர் என்றால் காட்டில் வசிக்கும் வேடர்களின் குடிசைத் தொகுதியே தவிர பிறி தல்ல. ஆத்மகூரிலிருந்து 12 மைல் சென்றால் நாகலூடி என்ற இடம். இதுவரையில் சமமான பூமி. நாகலூடியிலிருந்து 5 மைல் தொலைவிலுள்ள ரொல்லபெண்டா வரையில் மலைச் சரிவில் ஏற்றமான பாதை மிகக் குறுகலாகவுள்ளது. ரொல்ல பெண்டாவிலிருந்து 8 மைல் தொலைவில் பெத்த செருவு (=பெரிய ஏரி) என்ற இடமுள்ளது. இந்த 8 மைல் வழி யும் சிறிது செங்குத்தான வளைவுகள், ஏற்றம், இறக்கம்,

கணவாய்க் குறுவழி முதலியன நிரம்பிய மலைப்பாதை (Ghat Section) ஆகும். இரண்டு பக்கங்களிலும் சந்தன மரங்களும் மூங்கில் மரங்களும் அடர்ந்துள்ளன.

நூற்றுக் கணக்கான மாட்டு வண்டிகளைக் கடந்து இக் குறுகிய வழியிற் செல்லவேண்டியிருந்தமையால் நாகலூடியிலிருந்து பெத்த செருவுக்கு (13 மைல்) போக ஏறக்குறைய 7 மணி நேரம் ஆயிற்று. இரவு இரண்டு மணிக்குப் பெத்த செருவில் கர்நூலிலிருந்து வந்த நண்பர்களைக் கண்டோம். பெத்த செருவில் காட்டிலாகா (Forest Department) அதிகாரிகட்குப் பல விடுதிகள் உண்டு. பெரிய கொட்டகைகள் கட்டி ஆயிரக்கணக்கான மக்களுக்கு இலவசமாகச் சோறு போடுகிற தருமம் மிகுதியாக நடக்கிறது. இவ்விடத்தில் வேறு வழியில் உணவு கிடைப்பது மிகமிகக் கடினம். இவ்வாண்டில் மழையின்மையால் பெத்த செருவில் ஏரி நிறைந்தனைய செல்வம் ஒரு சிறிதுமில்லை. குடிப்பதற்கும் தண்ணீர் கிடைப்பதரிதாயிற்று. “நீள்ளு லேவு” என்ற கூக்குரல் வழி முழுவதும் கேட்டது.

மறுநாட் காலையில் மலையேறப் புறப்பட்டோம். பெத்த செருவிலிருந்து ஸ்ரீ சைலம் திருக்கோயிலுக்கு $9\frac{3}{4}$ மைல். இதில் முதலில் ஒரு மைல் தூரம் மோட்டார் செல்லும். பிறகு எல்லாம் கரடுமுரடான படிகளுள்ள ஏற்றமான வழி. ஆறு மைல் சென்றால் பீமினி கோளனு என்ற ஒரு சிறு ஓடையைக் காணலாம். இதில் முழங்காலளவு தண்ணீர் தேக்கமாகவும் கலக்கமாகவும் உள்ளது. இங்கிருந்து ஒரு மைல் தூரம் மிக மிகக் கடினமான செங்குத்தான வழி. இஃதே ஸ்ரீசைல யாத்திரையில் கடுமையான பகுதி. இவ்வழியின் இறுதியில் கைலாசத்வாரம் என்று ஒரு மிகச் சிறிய அரைகுறையான கோபுர வாயில் உள்ளது. இங்கே ஜில்லா போர்டு அதிகாரிகள் இரண்டு தண்ணீர்த் தொட்டிகள் கட்டி வைத்திருக்கிறார்கள். கைலாசத்வாரத்திலிருந்து ஸ்ரீசைலம் கோயில் $2\frac{3}{4}$ மைலிலிருக்கிறது. இடையில் (சரிபாதி வழியில்) சாக்ஷி கணபதி என்ற ஒரு சிறு விநாயகர் ஆலயம் உண்டு. இந்த $2\frac{3}{4}$ மைல் வழியும் மிகச் சுலபமானது.

ஸ்ரீ சைலம் திருக்கோயில் 660 அடி நீளமும் 510 அடி அகலமுமான நடுத்தர விஸ்தீரணமுள்ளது. 20 அடி உயரமுள்ள திருமதில்களில் புராண வரலாற்றுச் சிற்பங்கள் (puranic panel legends) மிகுந்துள்ளன. கோயிலுக்குள் யாத்ரீகர்கள் தங்குவதற்கு நூற்றுக்கணக்கான அறைகள் வாடகைக்குக் கிடைக்கும். கோயிலுக்கு மேற்கில் ஒரு குளமுண்டு. கோயிலுக்குள் இரண்டு சிறிய தீர்த்தங்களுண்டு. தல விருக்ஷம் அத்தி மரம். வழியெல்லாம் முள் நிரம்பி யிருப்பதால் கோயிலுக்குள்ளும் கருப்பக்கிரகம் வரையில் செருப்பு உபயோகிக்கப்படுகிறது இவ்வூரின் தனிச் சிறப்பு.

மூலஸ்தானத்தில் ஒரு சாண் உயரமுள்ள இலிங்க மூர்த்தியை அனைவரும் தொட்டு வழிபடலாம். அர்ச்சகர் இலிங்கதாரியான ஜங்கமர். மூலஸ்தானத்தின் பின்புறமாக மேற்கில் இரண்டாம் பிரகாரத்தில் பிரமராம்பாள் என்ற அம்பிகை சந்நிதியுண்டு. இங்கே பிராமணர் பூசை. இவ்வம்பிகைக்குச் சிவராத்திரி கழிந்த சில நாட்களில் உயிர்ப்பலி தரப்படுகிறது. முருகவேள் சந்நிதி முதலிய சிறிய சுற்றுக் கோயில்கள் மிகவும் பரிதபிக்கத்தக்க நிலையிலுள்ளன. இவற்றையும் யாத்ரீகர்கட்கு வாடகைக்கு விடுகிறார்கள். முருகவேள் திருவுருவத்தைச் சுற்றிப் பெட்டிகளும் படுக்கைகளும் தூய்மை யொழிந்தன பிறவும் நிரம்பியுள்ளன. சிவராத்திரியை யொட்டிப் பத்து நாட்கள் இரவில் மட்டும் சந்திரசேகரருக்குத் திருவிழா நடக்கிறது. சோமாஸ்கந்தருக்குச் சிவராத்திரியில் திருக்கல்யாணம். இரண்டு நடராஜ விக்ரஹங்களுண்டு.

கோயிலிலிருந்து $3\frac{3}{4}$ மைலில் செங்குத்தாக இறங்கும் பாதையிற் சென்றால் பாதாள கங்கை யென்ற கிருஷ்ணா நதியை யடையலாம். இங்கிருந்து நன்னீர் கொணர்ந்து மல்லிகார்ச்சுனராகிய ஸ்ரீ சைலேசருக்கு வழிபாடு செய்கின்றனர்.

நந்தியாலிலிருந்து பத்து மைலில் மகா நந்தி என்ற தல முள்ளது. ஸ்ரீசைலம் செல்ல இயலாதவர்கள் இங்கு சிவராத்திரியைக் கொண்டாடுகின்றனர்.

நல்லாரவர்பலர் வாழ்தரு வயல்நாவல வூரன்
செல்லலுற வரியசிவன் சீபர்ப்பத மலையை
அல்லலவை தீரச்சொன தமிழ்மாலைகள் வல்லார்
ஒல்லைச்செல உயர்வானகம் ஆண்டங் கிருப்பாரே.

## ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள்
## உபந்நியாசக் குறிப்புகளினின்று
# உதிர்ந்த மலர்கள்

[தொண்டன்]

1. உலகத்தில் சிறந்த பொருள் அன்பு. அன்பைக் காட்டிலும் சிறந்ததொன்றில்லை. முடிந்த முடிபாகும் அன்பு. அன்பாக வேறெந்த மொழியும் இல்லை. தமிழ் அன்பு மயமாக இருக்கிறது.

2. கடவுள் இரக்கம் உடையவர். நாம் துன்பம் உடையவர்கள். ஆகையால் இரக்கமுடைய அவர் சம்பந்தத்தாலேயே நம் துன்பம் நீங்க வேண்டும்.

3. நல்வினையின் பயனாகிய சுகத்தையும் தீவினையின் பயனாகிய துன்பத்தையும் சமமாக எண்ணுகின்ற நிலையில் கடவுள் கிருபை வருகிறது.

4. அடையாளத்திற்காகவும், வேண்டிய மங்களமடையவும், பரிசுத்தம் செய்துகொள்ளவும், ரக்ஷித்துக் கொள்ளவும் விபூதி அணிந்துகொள்வது வழக்கம்.

5. பக்தி என்பது ஞானத்தில் ஒரு பகுதியே. பக்தி செயல்வகையிலேயும் ஞானம் அநுபவவகையிலேயும் காணப்படுகின்றன.

6. நூல்களில் 3 வகை உண்டு.

1. நண்பனுக்கு உரைப்பதுபோ லிருப்பவை.
2. மனைவி, புருஷனைத் தன் வயப்படுத்தல்போலி ருப்பவை.
3. ஆசிரியன் மாணவனைக் கண்டித்தல் போலி ருப்பவை.

7. உருவமில்லாத கடவுள் நம்மை ரக்ஷிக்[illegible] துடன் வந்ததே அவதாரம் எனப்படும்.

# "ஆன்மா"

[வ. ம. உருத்திரசாமி ஐயர்]
(தலைமை ஆசிரியர், ஸ்ரீமத் ஞானியார் கலாசாலை, புலிசை)

**சீடன்** :—சுவாமீ, வந்தனம். சமயம் என்பதன் இயல்பு யாது?

**சைவ சித்தாந்தி** :—கடவுள், உயிர், உடல் இம்மூன்றின் உண்மை இயலை உணரும்படிச் செய்வதே சமயம்.

**சூன்யான்ம வாதி** :—உடலை யறிகிறேன். உடலினும் உயிர் வேறு உண்டோ? உயிரைக் காணகிலேன். உயிர் என்பது இல்லை.

**சை. சி.**—உயிர் இல்லை என்கிறீரே! அது ஏன்?

**சூ. வாதி** :—உடம்பைக் காண்கின்றேன். உயிரை யான் கண்டிலேன்; ஆதலால் உயிர் இல்லை என்கிறேன்.

**சை. சி** :—உயிர் இல்லை என்றது கொண்டு உயிர் உண்டு என்கின்றேன்.

**சூ. வாதி** :—முயற்குக் கொம்பு இல்லை என்றால் அது கொண்டே முயற்குக் கொம்பு உண்டு என்பீர் போலும்!

**சை. சி** :—இல்லாத தொன்றை மேற்கொண்டு இல்லை என்பது உலகில் இல்லை. ஒருவன் அறிந்ததொன்றை மற்று

வன் அறியாமையால் இல்லை என்பார்கள். அன்றியும் மற்றொன்று உளது.

சூ. வாதி :—அதனையும் அறிவித்தல் வேண்டும்.

சை. சி :—முயற்குக் கொம்பு இல்லை என்றதனாலே உண்டு என்கின்றேன். நீவிர் உரைத்ததில் முயல், கொம்பு என இரண்டு பொருள்கள் இருக்கின்றன. முயலும் உண்டு. கொம்பும் உண்டு. கொம்பு இல்லை என்பது இல்லை. முயற்கு இல்லையே அன்றி, கொம்பு என்னும் பொருள் உண்டு. நீர் அறிய உயிர் இல்லையே அன்றி, உயிர் என்பது ஒன்றுண்டு.

சூ. வாதி.—உடம்பை உடையேன். உடம்பின் அகத்தும், அகப்புறத்தும், புறத்தும் உயிரில்லை. அகத்தில் மன முதலியன இருக்கின்றன. அவை உயிரல்ல. அகப்புறத்தே கண் முதலியன இருக்கின்றன. அவையும் உயிரல்ல. புறத்தே விடயும் உருவம் முதலியனவாக இருக்கின்றன. அவையும் உயிர் அல்ல. ஆதலால் உயிர் இல்லை.

சை. சி.—இது உயிரல்ல, இது உயிரல்ல என்று அறிகின்ற பொருள், இருக்கின்றதன்றோ? அதுவே உயிர்.

சூ. வாதி.—அங்ஙனம் அறியும் அறி பொருள் இல்லையே.

சை. சி.—என்னை யீன்றவளை மலடி என்பவனை ஒக்கின்றாய்.

தேகாத்ம வாதி.—அறியும் பொருள் உடலில் உண்டு என்பது உண்மையே. அது நான்கு பூதக் கூட்டத்தால் ஆய உடம்பின் கண் அன்றி நிகழக் காணாமையாலும், நான்கு பூதமும் அறிவற்ற பொருளாயினும், பாக்கும் வெற்றிலையும் சுண்ணாம்பும் கூடிய வழிப் பிறந்த செவ்வண்ணம்போல, அப்பூதங்களின் கூட்டத்தில் ஓர் அறிவு உண்டாதல் பொருத்தமே. யான் பருத்தேன், யான் சிறுத்தேன், யான் மனிதன், யான் பார்ப்பான் என உடம்பினையே நான் என்று வழங்கப் பார்க்கிறோம். ஆதலால் உடம்பையே உயிர் என்பது எனது கருத்து.

சை. சி.—ஒருவன் தன்னின் வேறாய தனது மாட்டை எனது மாடு என்கின்றான். அப்போது மாடு வேறு அவன் வேறு. எனது உடல் என்று நீவிரும் கூறுகிறீர். யானும் கூறுகிறேன். வேறு பலரும் கூறுகிறார். உனதுடல் என்கிற போது உடல் வேறு உயிர் வேறு என்று அறிகிறோம். ஆதலின் உடலே உயிர் என்பது பொருந்தாது.

தே. வாதி.—எனது உயிர் என்கிறார்களே?

சை. சி.—அப்போது உயிர் என்று சொல்லுவது, உயிர்க்கும் அதாவது வெளிவிடுகிற பிராணவாயுவை.

இந்திரியான்ம வாதி.—உடல் சடம் - அறிவற்றது. ஆகலானும் வேறு பிற காரணங்களானும் தேகம் ஆன்மா அன்றென்பது ஒத்துக்கொள்ளத் தக்கதே. ஐம்பொறிகள் ஐம்புலன்களையும் அறியும் என்பது எல்லார்க்கும் ஒத்ததே. ஆதலின் இந்திரியமே ஆத்மா என்பது எனது கொள்கை.

சை. சி.—சப்த, பரிச, ரூப, ரச கந்தங்களாகிய ஐம்புலனையும் மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகள் அறியும் என்பது உண்மையே. அதுகொண்டு ஐம்பொறிகளே உயிர் என்பது பொருந்தாது.

இந். வாதி.—ஏன்? அன்ப!

சை. சி.—ஒரு இந்திரியம் அறிந்ததொன்றை மற்றொரு இந்திரியம் அறியக் கண்டிலேம். ஒரு இந்திரியம் அறிந்ததொன்றை மற்றொரு இந்திரியம் அறியும் என எவ்வகையிலேனும் சாதிப்பின் ஒரு இந்திரியமே போதியது. மற்றது வீண் அன்றோ?

இந். வாதி.—பின்னை என் நும் கொள்கை?

சை. சி.—ஐம்புலனையும் ஐம்பொறிகளைக் கொண்டு தனித்தனியே அறிவதாக இந்திரியங்களைக் காட்டிலும், வேறாக ஒன்று இருத்தல் வேண்டும் அதுவே ஆன்மா.

சூக்கும தேகாத்ம வாதி.—ஒரு இந்திரியம் அறிந்ததொன்றை ஒன்று அறியவில்லை. நாம் எல்லாம் அறிகிறோம். ஆதலின் ஐம்புலனையும் ஐந்து இந்திரியங்களைக் கொண்டு அறிவதாக வேறொன்று இருப்பதென்பது சரி.

சை. சி.—பேசற் கெழுந்த நும் கொள்கைதான் யாது?

சூ. தே. வாதி.—ஒரு பழத்தின் உருவத்தினுள் சுவை இருப்பது போல, இவ்வுடம்பினுள் சூட்சும சரீரம் ஒன்று இருக்கின்றது. அது ஐம்புலன் மனம் அகங்காரம் புத்தி ஆகிய எட்டினால் ஆக்கப்பட்டது. அதனால் அதற்குப் புரியட்டகம் என்றும் பெயர். அது புறத்து விளங்காது. அகத்தே நின்று இந்திரியங்களைச் செலுத்தியறியும், ஆதலின் சூக்கும தேகமே ஆன்மா என்பதுதான் சரி.

சை. சி.—விழித்துக் கொண்டிருக்கும் இந் நனவில் சூக்கும தேகமே அறிகிறது என்கிறீர். கனவில் அறிவது யாது?

சூ. தே. வாதி.—சூக்கும தேகமே அறிகிறது.

சை. சி.—அங்ஙனமாயின் முதல் நாள் இரவு கண்ட கனவினை அதிகாலை ஏதோ கனவு கண்டேன். இப்போது தெரியவில்லை என்று சிலர் சொல்வானேன்? வேறு சிலர் ஒருவாறு தெரிகிறது. திட்டமாகத் தெரியவில்லை என்பானேன்? சிலர்க்கு முற்றும் தெரிவானேன்?

சூ. தே. வா.—நீர் சொல்லிவந்தது கொண்டு என்ன நிச்சயிக்க வருகிறீர்.

சை. சி.—கனவிலும், நனவிலும் அறிவது தூல உடம்பினும் சூக்கும உடம்பினும் வேறாக ஒன்றிருக்கிறது. அதுவே உயிர்.

பிராணான்ம வாதி.—நனவிற் கண்டதைக் கனவில் மறந்தும், கனவிற் கண்டதை நனவில் எண்ணுங்கால் மயங்கியும் அறதலின் சூக்கும தேகம், உயிர் அல்ல என்பது ஒத்துக் கொள்ளத் தகுந்ததே.

சை. சி. நும் மதந்தான் யாது?

பி. வாதி.—பிராண வாயுவின் தொழில் கனவிலும் உண்டு; நனவிலும் உண்டு. அதுவே அடங்குதல் விடுதல் செய்து அறிகின்றது. ஆதலின் அப்பிராண வாயுவே உயிர்.

சை. சி.—பிராண வாயு கனவிலும் நனவிலும் இருக்கின்றதென் றியம்பினீர். நல்லது. அங்ஙனமாயின் என்

நனவில் இன்ப துன்ப அனுபவம் இருக்கிறது. கனவில் இல்லை. நனவில் உடம்பு தொழிற்படுதல் இருக்கின்றது. கனவில் உடம்பு தொழிற்படுதல் இல்லை.

பிரா. வாதி.—யாது தான் முடிவு கட்டுகிறீர்?

சை. சி.—பிராண வாயு இரு அவஸ்தையினும் வேறுபாடின்றி இருந்தும் அனுபவம் தொழில் இவைகளில் வேறுபாடு காண்கிறோம். இவ்வனுபவத்திற்கும் தொழிலுக்கும் காரணமாய்ப் பிராணவாயுவினும் வேறு ஒன்றுண்டு. அதுவே உயிர் என்பது பெறப்படும்.

பிரமான்மவாதி.—தூல உடம்பு, இந்திரியம், சூக்கும உடம்பு, பிராண வாயு இவைகள் சடம். அறிவற்றது ஆதலின் இவற்றை உயிர் என்றல் பொருந்துவது அன்று.

சை. சி.—பின் எதனை உயிர் என்கிறீர்?

பிரம. வாதி.—பிரமம் சித்தாதலின் அதுவே உயிர்.

சை. சி.—பிரமம் என்றது எதனை?

பிரம. வாதி.—அது எக்காலத்தும் எவ்விடத்தும் மாறுபாடு இன்றி அறிவிப்பார் இன்றி அறியும் முழு ஞான மயமான பொருள்.

சை. சி.—அங்ஙனமாயின் பிரமம் உயிர் அல்ல.

பிரம. வாதி.—எது கொண்டு?

சை. சி.—உயிர் ஒரு நிலையில் அறியும். ஆற்றல் இன்றி இருக்கவும் அறிவிக்கவும் முற்றும் அறியாது. சிறிது தெரிந்தும் அறிவித்த அறிவு அறிந்தும் இருக்கக் காண்கிறோம். அப்படி இருக்க அறிவிப்பாரின்றியே அறியும் முழுஞானப் பொருளாகிய பிரமமே உயிர் என்பது எங்ஙனம் கூடும்.

பிரமவாதி.—வேறென்ன கூறுகிறீர்.

சை. சி.—பிரமத்தினும் வேறு உயிர் என்பேன்.

சமூகாத்ம வாதி.—முழு அறிவுமயமாகிய பிரமத்தினும் உயிர் வேறே. தூல உடம்பு முதலியவற்றுள் ஒவ்வொன்றை உயிர் அல்ல என்றது நியாயமே. அவற்றுள் ஒன்று குறையினும் அறிவு நிகழவில்லை. எல்லாம் கூடிய வழி அறிவு நிகழக்

காண்கிறோம். ஆதலின் உடம்பு முதலிய அனைத்தும் கூடிய சமுதாயமே உயிர்.

சை. சி.—மேற் கூறியவற்றுள் பிரமம் ஒழிந்த மற்றை யன அழிந்துவிடுவன. உயிர் என்றும் உள்ளது. அதுவன்றி யும் அவைகட்கெல்லாம் வேறு வேறு பெயர் உள்ளன. சமு தாயத்திற்கு ஆன்மா என்ற பெயரும் இல்லை. ஆதலின் சமுதாயமே ஆன்மா அல்ல.

அந்தக்கரணான்ம வாதி.—உடம்பு முதலியவற்றிற்கு ஆன்மா என்று பேரில்லை. சமுதாயத்திற்கும் ஆன்மா என்ற பேரில்லை என்று கூறினீர். அது ஒக்கும். மனம் முதலிய அந்தக்கரணங்கட்கு ஆன்மா என்ற பெயர் இருக்கின்றது ஆதலின் அந்தக்கரணத்தை ஆன்மா என்கிறேன்.

சை. சி.—நெருங்கிய அன்பரே வருக! அந்தக்கரணங் கள் என்றீர்களே அவை எவை?

அ. வாதி.—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

சை. சி.—மனம் முதலியவற்றின் செயல்யாது?

அ. தி.—ஐம்பொறிகள் அறிந்த ஒரு விடயத்தை சித்தம் சிந்தித்தறியும். மனம் அதனை சங்கற்ப விகற்பம் செய்து அறியும். அகங்காரம் ஒருப்பட்டு எழுந்து அறியும். புத்தி நிச்சயித்தறியும்.

சை. சி.—சித்தம் சிந்தித்தேன் என்று அறியுமா?

அ. வாதி.—அறியாது.

சை. சி.—மனம் சங்கற்ப விகற்பம் செய்தேன் என்று அறியுமா?

அ. வாதி.—அறியாது.

சை. சி.—அகங்காரம் யான் ஒருப்பட்டெழுந்தேன் என்று அறியுமா?

அ. வாதி.—அறியாது,

சை. சி.—புத்தி யான் நிச்சயித்தேன் என்றறியுமா?

அ. வாதி.—அறியாது.

**சை. சி.**—யான் சிந்தித்தேன், பற்றினேன், எழுந்திருந்தேன், நிச்சயித்தேன் என்று அறிகிறோமா?

அ. வாதி.—ஆமாம்.

சை. சி.—அப்போது சிந்திக்கும் சித்தத்தினும், பற்றும் மனத்தினும், எழுந்திருக்கும் அகங்காரத்தினும், நிச்சயிக்கும் புத்தியினும் வேறு ஒரு பொருள் உளது. அதுவே உயிர்.

அ. வாதி.—அது எத்தகையது?

சை. சி.—ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய்ப் பாசத்தடையுடையவைகளாய் சரீரந்தோறும் வெவ்வேறாய் வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாய் சார்ந்ததன் வண்ணமாய், தங்களுக்கு ஒரு தலைவனை உடையவைகளாய் இருப்பன.

(சிவஞானபோதத்தின் மூன்றுவது நான்காவது சூத்திரங்களின் கருத்து.—பத்திராசிரியர்.)

# மதிப்புரைகள்

**திரு அருள் மொழி.**—மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினர் வெளியீடு—604 + 14 பக்கங்கள் - முழுகலிக்கோ ரூ. 3–12–0, அட்டை ரூ. 2–14–0 இது மிக மிக அருமையான பதிப்பு - 183-பக்கங்கொண்ட முகவுரையில் பக்தியின் பொது இயல்பு, பக்தியின் வகைகள், பக்தியிற் சில படிகள், பக்திவளரும் முறை முதலியன மிகத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. சைவம், வைணவம், மகாராட்டிர மதம், ஸ்ரீசைதன்ய மதம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய சமயங்களில் போதிக்கப்படும் பக்தி நெறி தகுந்த மேற்கோள்களுடன் விவரிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பொது நெறியிலுள்ள நுட்பங்கள் திட்பமாகக் கூறப்பட்டுள்ளன. பிறகு மூவர் தேவாரத்திலிருந்து (95 + 80 + 75) பாடல்களும், திருவாசகத்திலிருந்து 50 பாடல்களும், நாலாயிர

திவ்விய பிரபந்தத்திலிருந்து 200 பாடல்களும் (ஆ 500 பாடல்கள்) தெளிவான பொழிப்புரையோடும் பொருள் செறிந்த குறிப்புரையோடும் விளக்கப்பட்டுள்ளன. நிரம்பிய சமரச உணர்ச்சியோடு இப்பதிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இக்காலத்திய அகவிலையை நோக்குமிடத்து இதன் விலை மிகக் குறைந்ததென்றே கருதலாம். தமிழார்வமுள்ள ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இருத்தற்குரியது. வேண்டுவோர் "ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர்" என்ற விலாசத்துக்கெழுதுக.

உள்ளொளி.—திரு. வி. கலியாணசுந்தரனார் - பக்கம் 302 + 12 ராப்பர் விலை ரூ 2-கிடைக்குமிடம் : முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை. இந்நூலில் ஆசிரியர் திரு. வி. க. அவர்கள், உள்ளமும் உருவமும், உள்ளுணர்வும் வழிபாடும், உள்ளொளி என்ற மூன்று பகுதிகளில் உள்ளம், மனம் முதலியவற்றின் வகைகள், புறமனம், நடுமனம், அடிமனம் முதலியவற்றின் தொழிற்பாடு, கூல்ரிட்ஜ், புராக்டர், அயோத்திதாஸ் பண்டிதர், இரத்தினவேலனார் முதலிய சிலர் அனுபவங்கள், குறிசொல்வதின் நுட்பம், மருதூர் அம்மையார் அற்புதங்கள், சூன்யசம்பாஷணை, உருவதத்துவம், உருவ வழிபாடு, யோகமார்க்கம், காதல், வீரம், காவியவழிபாடு, இயற்கை வனப்பு, நடராசர் முதலிய உருவங்களின் தத்துவம், சிவலிங்க நுட்பம், உள்ளொளியும் அழுகையும் முதலிய நூற்றுக் கணக்கான பொருள்களை சைவ வைணவ சமண கிறிஸ்தவ இஸ்லாமிய சமய மேற்கோள்களுடன் நிரம்பிய திறமைவாய்ந்த ஆராய்ச்சி முறையில் விளக்கியுள்ளார். இது சமரச நாட்டமுள்ள ஒவ்வொரு இளைஞர்கையிலும் இருத்தற்குரியது.

நாலாயிர திவ்விய ப்ரபந்தம் - மயிலை மாதவதாஸன் பதிப்பு - 744 + 48 பக்கங்கள் - முழுகலிக்கோ-விலை-1-12-0. கிடைக்குமிடம்: முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை. இதில் ஆழ்வார்கள் அருளிய பாடல்கள் முழுமையும் திருத்தமான முறையில் பல ஆராய்ச்சி அகராதிகளுடன் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வளவு குறைந்த விலைக்குச் செம்மையான

பதிப்பு இதுவரையில் வெளிவரவில்லை. வடகலை தென்கலை ஆகிய இருதிறத்தாருக்கும் பொதுவான முறையில் இது அச்சிடப்பட்டுள்ளது. தமிழார்வமுள்ள ஒவ்வொருவர் கையிலும் இப்பதிப்பு இருத்தற்குரியது.

திருப்புள்ளிருக்குவேளூர்ப் புகழ்மாலை, திருவாசகம் (சிவபுராணம். கீர்த்தித் திரு அகவல்). திருவருட்பா திரட்டு, லெட்சுமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை வெளியீடுகள் (திரு. ந. சொ. அரு. அருணாசலம் செட்டியாரவர்கள், ஸ்ரீ முத்துக்குமார நிலையம், தியாகராயநகர், சென்னை - என்ற விலாசத்திற்கு, தபாற்கூலி மட்டும் அனுப்பி விலையின்றிப் பெறலாம்) இச்சிறு நூல்கள் மிக நல்ல முறையில் அச்சிடப்பட்டுள்ளன. பாடசாலைகளிலுள்ள இளைஞர்கள் மனப்பாடம் செய்து ஆலயங்களில் கூட்டமாக இருந்து பாடுவதற்கு ஏற்ற பாடல்கள் திரட்டப்பட்டுள்ளன. சைவ ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துள்ள பாடசாலை அதிபர்கள் இத்தகைய வெளியீடுகளைப் பயன் படுத்திக்கொள்வது சிறந்த சமயத் தொண்டாகும். திரு. அருணாசலம் செட்டியாரவர்கட்கு நமது சமாஜத்தின் நன்றி உரித்தாகுக.

பழநி ஆண்டவர்.—பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தின் மாத வெளியீடு. கிருத்திகை தோறும் வெளி வருவது. தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற நாட்களில் விசேஷ இதழ்களும் வருகின்றன. தபாற்கூலியுள்பட ஆண்டுச் சந்தா ரூ. 1-12-0; தனி இதழ் 0-2-9. ஆசிரியர் திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L. உதவி ஆசிரியர் சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார். இப்பத்திரிகையை மனமார வரவேற்கிறோம். பழநித் தலத் திருப்புகழ் முதலியன உரையோடும், திருமுருகன்; சைவ சமயம், விநாயகர் பெருமை, திருநீறு, ஆண்டவன் முதலிய செம்பொருள்களைப் பற்றிய கட்டுரைகளோடும் பழநி தேவஸ்தானத்தைப் பற்றிய அறிக்கைகளோடும் வெளி வருகின்றது. பெரிய தேவஸ்தானங்கள் ஒவ்வொன்றிலும் இத்தகைய வெளியீடு

கள் அவ்வப்போது மக்களுக்குச் சமய ஞானத்தை ஊட்டுதல் மிக அவசியம்.

கலாநிதி.—(கலையாக்கங் கருதிய கால் ஆண்டு வெளியீடு - Quarterly). ஆசிரியர் திரு. கி. சதாசிவ ஐயர், யாழ்ப்பாணம். ஆண்டுச் சந்தா ரூபா 2. கிடைக்குமிடம்: "கலாநிதி" நிலையம், சுன்னாகம், இலங்கை. இப்பத்திரிகையிற் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் தமிழ் இலக்கியச் சுவை, ஓவியக் கலை, புதிய கவிதைகள், கதைகள் முதலியனவும் நல்ல முறையில் அமைந்துள்ளன. மஹா மஹோபாத்யாயர் - பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார், ராவ்சாஹேப் - எஸ். வையாபுரிப் பிள்ளை முதலிய பேரறிஞர்கள் இப்பத்திரிகையைப் பாராட்டி யுள்ளனர். தமிழன்பர்கள் இதை ஆதரிக்க முன் வருக.

திருமுறைச் சிறப்பு.—இவ்வுரை நடையினைத் திருவாளர் வித்துவான் - S. பெரியசாமிப் பிள்ளை (தலைமைத் தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், பரங்கிப்பேட்டை), பின்னலூர் - சைவத்திருவாளர் - ரா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களின் 60-ஆம் ஆண்டு நினைவு மலராக வெளியிட்டுள்ளார். சைவத் திரு சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் நன்மதிப்புப் பெற்றது. ஆசிரியர் தமது நீண்ட ஆராய்ச்சி, ஆழ்ந்த அநுபவம் இவற்றைக் கொண்டு திருமுறை என்பதன் பொருள், அதன் ஆசிரியர்கள், அவை என் பாடி அருளப்பட்டன, அதை எப்படி ஓதவேண்டும், அதனால் ஏற்படும் பயன் ஆகிய இவற்றை நன்கு தெளிவாக விளக்கியுள்ளார். பக்கம் 24. விலை குறிக்கப்படவில்லை.

Printed at the Sadhu Pre[illegible] Mudali Street, Royapettah, by T. V. Vo[illegible] (Publisher) [illegible] the Saiva Siddhanta Maha Sa[illegible] "Thiruvar[illegible]", 22-A, Kallukaran Street, My[illegible] Madras.